


# சாக்கினாவீர் (இன்விரேஸ், போர்டோவேஸ்)

## சாக்கினாவீர் மருந்து எனக்கு ஏன் கொடுக்கப்படுகிறது?

- சாக்கினாவீர் (இன்விரேஸ், போர்டோவேஸ்) எனும் மருந்து மற்ற மருந்துகளுடன் இணைந்து ஹெச்ஐவி ( ஹ்யூமன் இம்யுனோ டிபிஷியன்சி வைரஸ்) நோயின் சிகிச்சையில் பயன்படுத்தப்படுகிறது.
- சாக்கினாவீர் "ப்ரோட்டீஸ்" எனும் புரோட்டீனை தடுக்கிறது. இது ப்ரோட்டீஸ் இன்ஹிபிட்டர்ஸ் (பிஐ) எனும் மருந்துகள் பிரிவை சேர்ந்தது. ஹெச்ஐவி கிருமி பெருக, அதற்கு இந்த புரோட்டீன் தேவைப்படுகிறது. அதனால் இந்த மருந்து அதை தடுப்பதன் மூலம் ஹெச்ஐவி நோயை தாமதப்படுத்த உதவுகிறது.
- இந்த மருந்தை உட்கொள்ளுவதால், உங்கள் உடலில் உள்ள கிருமியின் அளவை குறைக்கலாம். நீங்கள் எய்ட்ஸ் சம்பந்தப்பட்ட நோய்களினால் நோய்வாய்ப்படுவதற்கான வாய்ப்புகள் குறையலாம், உடல் அதிக நாள் ஆரோக்கியமாக இருக்க உதவுகிறது அல்லது உடல் ஆரோக்கியத்தை மீண்டும் பெறலாம். உங்கள் நோய் எதிர்ப்பு சக்திக்கு ஏற்படும் சேதத்தையும் குறைக்கலாம்.

## இந்த மருந்தை நான் எப்படி எடுத்துக் கொள்ள வெண்டும்?

- சாக்கினாவீர் இரு வேறு விதமாக கிடைக்கிறது:
  - இன்விரேஸ் – 200 மி.கி. பச்சை மற்றும் மஞ்சள் காப்ஸ்யூலாக
  - போர்டோவேஸ் – 200 மி.கி. இள சந்தன நிற மென்மையான ஜெல் காப்ஸ்யூலாக
- மாத்திரை எண் நீங்கள் எந்த வித மருந்தை எடுத்துக் கொள்கிறீர்கள் என்பதை பொறுத்தது. இன்விரேஸ் மற்றும் போர்டோவேஸ் இரண்டையுமே சாப்பாட்டுடனோ அல்லது சாப்பிட்ட இரண்டு மணி நேரங்களிலோ எடுத்துக் கொள்ள வேண்டும்.
- காப்ஸ்யூல்களை முழுதாக முழுங்க வேண்டும். மெல்லவோ, நசுக்கவோ கூடாது.
- இப்போதெல்லாம், சாக்கினாவீர், ரிட்டோநாவீர் (நார்வீர்) போன்ற மற்றொரு ப்ரோட்டீஸ் இன்ஹிபிட்டருடன் இணைந்து கொடுக்கப்படுகிறது.
- மருந்தை பாத்ரூம் அல்லது சமையலறையில் வைக்க வேண்டாம். ஈரபசையினால் மருந்தின் திறன் குறையலாம்.
  - இன்விரேஸ் காப்ஸ்யூல்கள், உலர்ந்த இடத்தில் அறையின் சீதோஷண நிலையில் வைக்கப்பட வேண்டும்.
  - போர்டோவேஸ் காப்ஸ்யூல்களை அறையின் சீதோஷண நிலையில் 3 மாதங்கள் வரை வைத்திருக்கலாம்.
- குழந்தைகளிடமிருந்து மருந்துகளை நீக்கி வைக்கவும்.



ASAAP
ALLIANCE FOR SOUTH ASIAN AIDS PREVENTION
www.asaap.ca

CATIE
Canadian AIDS Treatment Information Exchange
Réseau canadien d'info-traitements sida
www.catie.ca

## ஒரு நேர மருந்தை நான் எடுத்துக் கொள்ள மறந்தால் என்ன செய்ய வேண்டும்?

- தவறவிட்ட மருந்தை முடிந்தவரை உடனே எடுத்துக் கொள்ளவும்.ஆனால் உங்கள் அடுத்த வேளை மருந்திற்கும், தவற விட்ட மருந்திற்கும் இடையே 2மணி நேரத்திற்கும் குறைவாக இருந்தால் வழக்கமான முறையில் மருந்தை எடுத்துக் கொள்ளவும், இதை இரட்டிப்பாக்க வேண்டாம்.
- ஹெச்ஐவி மருந்துகள் வேலை செய்ய, எல்லா மருந்துகளையும் முறையாகவும், தொடர்ந்தும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அண்மைக்கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மருந்துகளை சரியாக எடுத்துக் கொள்ள தவறினால் அல்லது மறந்தால், அதன் பயனை இழக்கலாம், மேலும் இந்த வைரஸில் தாமாகவே மாற்றம் ஏற்பட்டு மருந்திற்கு எதிராக மாறி பயன் அளிக்காமல் போகலாம்.

## சாக்கினாவீரின் பக்க விளைவுகள் என்னென்ன?

சாக்கினாவீரின் பொதுவான பக்க விளைவுகளில் சில:

- வயிற்றுக் கோளாறு மற்றும் குமட்டல்
- வாயு மற்றும் வயிற்று போக்கு
- சொறி
- தலைவலி
- சோர்வு

சாக்கினாவீரின் நெடுங்கால பக்க விளைவுகளில் சில:

- இரத்தத்தில் சர்க்கரை மற்றும் கொழுப்பு (கொலஸ்ட்ரால், ட்ரைகிளிசரைட்) அளவுகள் அதிகரித்தல்.
- அசாதாரணமான உடல் பருமன் (இடுப்பு, மார்பு அளவுகள் அதிகரித்து முகம், கை கால்கள் இளைப்பது)
- இந்த பக்கவிளைவுகள் இருந்தால் டாக்டர் அல்லது மருந்து கடைக்காரரை கலந்தாலோசிக்கவும். அவர்களிடம் பேசுமுன் மருந்துகளை நிறுத்தவோ அளவுகளை மாற்றவோ வேண்டாம்.

## மற்ற மருந்துகளுடன் சாக்கினாவீர் எடுத்துக் கொள்ளலாமா?

- சாக்கினாவீர் மற்ற மருந்துகளுடன் இணைந்து செயல்படலாம். நீங்கள் எடுத்துக்கொள்ளும் டாக்டர் கொடுத்த மருந்துகள் மற்றும் வேறு (மூலிகைகள் மற்றும் வைட்டமின்கள் உட்பட) மருந்துகள் பற்றி டாக்டர் மற்றும் மருந்து கடைக்காரரிடம் கூறவும்.
- சாக்கினாவீர் மற்ற மருந்துகளுடன் இணைந்து பாதிப்பு ஏற்படுத்தலாம்:
  - ஹிஸ்மானால் (ஆஸ்டிமிஸோல்)
  - செல்டேன் (டெரிபேனடைன்)
  - ப்ரீபுல்சைட் (சிஸாப்ரைட்)
  - ரிபாம்பின்
  - ரிபாபுடீன்

ஆகிய மருந்துகளுடன் எடுத்துகொள்ளக்கூடாது.

## சாக்கிரைவீரை மது மற்றும் தெருவோர போதை மருந்துகள் உடன் எடுத்துக் கொள்ளலாமா?

- சாக்கினாவீர் மருந்து எடுத்துகொள்ளும்போது அதிக அளவு மது அருந்துவதை தவிர்ப்பது நல்லது. நீங்கள் எடுத்துக்கொள்ளும் மருந்துகளுடன் மது விளைவுகளை ஏற்படுத்தி,

கல்லீரல் சேதமாகும் அபாயத்தை அதிகறிக்கலாம். குடிக்க வேண்டும் என்பதால் ஒரு நேர மருந்தை தவிர்க்க வேண்டாம்.
- சாக்கினாவீர் தெருவோர போதை மருந்துகளுடன் சேர்ந்து விளைவுகளை ஏற்படுத்தலாம். நீங்கள் தெருவோர போதை மருந்து எடுத்துக் கொள்பவராக இருந்தால், டாக்டர் அல்லது மருந்து கடைகாரரிடம் பேசவும். அவர்கள் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றி கூறுவார்கள்.

## நான் கர்பமாக இருந்தாலோ, தாய்பால் ஊட்டி வந்தாலோ சாக்கினாவீர்-ஐ எடுத்துக் கொள்ளலாமா?

- நீங்கள் கர்பமாக இருந்தால், சாக்கினாவீர் மருந்து எடுத்துக் கொள்வது பற்றி டாக்டரிடம் கலந்து பேசவும்.
- தாய்பால் மூலமாக ஹெச்ஐவி கிருமி பரவும் என்பதால், ஹெச்ஐவி உள்ள பெண்கள் தாய்பால் கொடுப்பதை தவிர்க்கலாம் என்று பரிந்துறைக்கப்படுகிறது.

## சாக்கினாவீர் எடுத்துக் கொள்ளும் போது வேறு என்னென்ன முன்னெச்சரிக்கைகளை பின்பற்ற வேண்டும்?

- உங்கள் கல்லீரல், கணையம், சிறு நீரகத்தின் செயல்பாடு, இரத்தத்தில் சர்க்கரை, கொலஸ்ட்ரால் மற்றும் ட்ரைகிளிசரைட் அளவுகளை முறையாக மருத்துவரிடம் சென்று சோதித்துக் கொள்ளவும்.
- தொடர்ச்சியாக மருந்துகள் இருக்கிறதா என உறுதிபடுத்திக் கொள்ளுங்கள்.
- சாக்கினாவீர் கிருமிகளை அழிப்பதில்லை, எய்ட்ஸ்-ஐ குணப்படுத்துவதில்லை. ஹெச்ஐவி பறவுவதை தடுப்பதும் இல்லை, அதனால் முன்எச்சரிக்கை எற்பாடுகளை செய்து கொள்ளவும், உடலுறவு கொள்ளும் போது (லேடெக்ஸ் காண்டோம்களை பயன்படுத்தவும்) அல்லது போதை மருந்து பயன்படுத்தும்போது (சுத்தமான ஊசிகளை பயன்படுத்தவும்).

ஹெச்ஐவி சம்பந்தப்பட்ட நோய்கள் மற்றும் சம்பந்தப்பட்ட சிகிச்சைகள் பற்றி முழு தகவல் தெரிந்த பயிற்சி பெற்ற மருத்துவரின் ஆலோசனையின் பேரில் மட்டுமே குறிப்பிட்ட மருத்துவ சிகிச்சைகள் பற்றி முடிவெடுக்க வேண்டும்.

தங்களை கவனித்து கொள்பவர்களுடன் சேர்ந்து, உடல் நிலையை தாமே பராமரிக்க விரும்பும் ஹெச்ஐவி/எய்ட்ஸ் நோய் உள்ளவர்களுக்கு தகவல் மற்றும் உதவியை கனடாவின் எய்ட்ஸ் சிகிச்சை தகவல் பரிமாற்றம் (CATIE) மற்றும் தெற்காசிய எய்ட்ஸ் தடுப்பு நிலையம் (ASAAP) நல்லெண்ணத்துடன் வழங்குகிறது. CATIE(கேட்டி) அல்லது ASAAP (ஏஸாப்) அளிக்கும் அல்லது பிரசுரிக்கும் தகவல்களை பெறுபவர்கள் இதை மருத்துவ ஆலோசனையாக கருதக்கூடாது. குறிப்பிட்ட சிகிச்சைகளை நாங்கள் பின்பற்றவோ, பரிந்துரைப்பதோ இல்லை, பல்வேறு விரிவான தகவல்களை கலந்தாலோசிக்கவே நாங்கள் வலியிறுத்துகிறோம். மருத்துவம் சம்பந்த்ப்பட்ட எந்த ஒரு முடிவையோ, நடவடிக்கையையோ எடுக்குமுன் பயிற்சி பெற்ற மருத்துவரை கலந்து ஆலோசிக்குமாறு வலுவாக வலியிறுத்துகிறோம்.

CATIE அல்லது ASAAP அளிக்கும் அல்லது பிரசுரிக்கும் தகவல்கள் முழுமையானவை அல்லது முற்றிலும் சரியானவை என்பதற்கு நாங்கள் எந்த உத்தரவாதமும் அளிப்பதில்லை. இந்த தகவல்களின் அடிப்படையில் செயல்படுபவர்கள் தங்கள் சொந்த பொறுப்பில் செயல்படலாம். இத்தகைய தகவல்களிலிருந்து பெறும் பயன் அல்லது அவபயன்களால் ஏற்படக்கூடிய எந்த ஒரு சேதத்திற்கும் CATIE அல்லது ASAAP அல்லது கனடாவின் பொது சுகாதார ஏஜென்சியோ, அதன் ஊழியர்களோ, இயக்குநர்களோ, அதிகாரிகளோ, அல்லது தொண்டர்களோ, பொறுப்பாக மாட்டார்கள். CATIE அல்லது ASAAP மூலமாக கிடைக்கும் அல்லது பிரசுரிக்கப்படும் கட்டுரையின் கருத்துக்கள் முற்றிலும். ஏழுத்தாளரின் கருத்துக்கள் ஆகும், இது CATIE அல்லது ASAAP யின் கொள்ளகைகளையோ கருத்துக்ளையோ பிரதிபலிப்பதில்லை. கனடாவின் எந்த ஒரு பொது சுகாதார ஏஜென்சியின் கருத்துக்களையும் இது பிரதிபலிப்பதில்லை.

Copyright: This Fact Sheet is made available through a collaboration between Alliance for South Asian AIDS Prevention (ASAAP), Asian Community AIDS Services (ACAS) and the Canadian AIDS Treatment Information Exchange (CATIE). Original content developed by ACAS, 2001. Translation into Punjabi and Tamil by ASAAP, 2006.

This information is also available in Chinese, Tagalog and Vietnamese www.acas.org

Funding has been provided by the Public Health Agency of Canada
Supported by an unrestricted educational grant from GlaxoSmithKline in partnership with Shire BioChem